# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் - 06 | குடியியற் கல்வி | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் :- ..........................

### பகுதி I

❖ மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01) சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் செயற்றிறன் மிக்கவர்களை உருவாக்கும் நிறுவனம்
1) குடும்பம் 2) பாடசாலை 3) தனியார் கல்விநிறுவனம் 4) மதவழிபாட்டுத்தலம்.

02) உங்களது வயதைச் சரியாக உறுதிப்படுத்தும் ஆதாரம்
1) மாணவர்சேர்வு இடாப்பு 2) மாணவர் வரவு இடாப்பு
3) மாணவர் விடுகைப் பத்திரம் 4) பிறப்புச் சான்றிதழ்.

03) எம்மிடம் காணப்படும் சிறந்த நற்பண்புகளில் ஒன்று.
1) நேர்மை 2) சுயநலம் 3) பொறாமை 4) ஆடம்பரம்.

04) இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சராகப் பதவி வகித்தவர்.
1) D.S. சேனநாயக்கா 2) S.W.R.Dபண்டாரநாயக்க.
3) C.W.Wகன்னங்கர 4) J.Rஜெயவர்த்தன.

05) திட்டமிட்டுச் செயற்படாத மாணவனுக்குரிய இலட்சணம்.
1) நேரத்தை உச்சமுறையில் பயன்படுத்துதல்.
2) உள நெருக்கீட்டுடன் வேலையில் ஈடுபடுதல்.
3) மகிழ்ச்சியுடன் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
4) நோக்கத்தை அடைந்துகொள்தல்.

06) பாடசாலையின் தனித்துவமானஅடையாளம், அனைவரும் சமமானவர்கள் போன்ற நியமங்களை எடுத்துக் காட்டுவது.
1) மகுடவாசகம் 2) பாடசாலைசீருடை
3) பாடசாலைக் கொடி 4) பணிக்கூற்று

07) பாடசாலை மாணவர் என்றவகையில் உமக்குள்ள உரிமை.
1) கல்வியைப் பெற்றுக் கொள்ளல் 2) சூழலைப் பாதுகாத்தல்.
3) சட்டத்தை மதித்து நடத்தல் 4) ஒழுக்கம் பேணல்.

08) பிள்ளைகளைமையமாகக் கொண்டு சுகாதார வசதிகளையும்,பாதுகாப்புச் சூழலையும் வழங்குகின்ற பாடசாலைகள்
1) ஆயிரம் பாடசாலைகள் 2) பிள்ளைநேயப் பாடசாலைகள்
3) நவோதயபாடசாலைகள் 4) சர்வதேசபாடசாலைகள்

09) கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பலஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட நிர்வாக அலகு.
1) மாவட்டம் 2) மாநகர சபை 3) மாகாணம் 4) பிரதேசசெயலர் பிரிவு.

10) குறிப்பிட்ட சில பிரதேசத்திற்கு உரியனவாகக் காணப்படுகின்ற வளங்கள்.
1) காற்று 2) கனியவளங்கள் 3) சூரியஒளி 4) மண்

11) இலங்கையிலுள்ள மாவட்ட,மாகாணப் பிரிவுகளின் எண்ணிக்கை முறையே.
1) 22,08 2) 25, 09 3) 26, 07 4) 24, 06

12) வடமாகாணத்தின் தற்போதைய ஆளுநர்.
1) கௌரவ. க.வி. விக்னேஸ்வரன் 2) கௌரவ .சி.வி.கே. சிவஞானம்
3) கௌரவ றெஜினோல்ட் கூரே 4) கௌரவ கருஜயசூரிய.

13) கிராமம் அங்கு வாழும் மக்கள் தொடர்பான தகவல்களை அரசாங்கத்தோடு பகிர்ந்து கொள்ளும் இணைப்பு அதிகாரியாகச் செயற்படுபவர்.
1) கிராமஉத்தியோகத்தர் 2) தவிசாளர்
3) ஆளுநர் 4) முதலமைச்சர்.

14) இலங்கைஅரசு பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குகின்ற நலன்புரிச் சேவை.
1) மின்சாரசேவை 2) நீர்வழங்கல் சேவை
3) வைத்தியசேவை 4) போக்குவரத்துச் சேவை.

15) மனிதனின் ஆன்மீகப் பண்புகளை மேம்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுக்கும் சமூக நிறுவனம்.
1) கூட்டுறவுச் சங்கம் 2) சனசமூகநிலையம்
3) பாடசாலை 4) மதவழிபாட்டுத்தலம்.

16) பாடசாலைகளில் தொற்று நோய்க்கட்டுப்பாடு, மாணவர்களின் மருத்துவசுகாதாரப் பரிசோதனை போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் அதிகாரி.
1) குடும்பநலஉத்தியோகத்தர் 2) பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
3) வைத்தியஅதிகாரி 4) சுகாதாரப் பணிப்பாளர்.

17) மனிதர்களிடம் காணப்படும் விசேடப் பண்பு.
1) சுயநலவாதியாக வாழ்தல் 2) விட்டுக் கொடுத்து வாழ்தல்.
3) ஒற்றுமையாக வாழ்தல். 4) நல்லொழுக்கமுடையவராக வாழ்தல்.

18) இயற்கைவளங்களைக் கொண்டுள்ள விடைத்தொகுதி.
1) கட்டடம், மலைத்தொடர், மண்.
2) காடுகள், களப்புக்கள், நீர்வீழ்ச்சிகள்.
3) ஆகாயவிமானம், காடுகள், கப்பல்கள்
4) சமவெளி, குடியிருப்புக்கள், காற்று.

19) அம்பாந்தோட்டை மாவட்டம் அமைந்துள்ள மாகாணம்.
1) மேல் மாகாணம் 2) மத்தியமாகாணம் 3) தென் மாகாணம் 4) வடமாகாணம்

20) இஸ்லாமியரின் வணக்கஸ்தலமும், புனிதநூலும் உடைய விடையைத் தெரிவுசெய்க.
1) விகாரை,திரிபீடகம் 2) தேவாலயம்,பைபிள்
3) ஆலயம்,வேதங்கள் 4) பள்ளிவாசல்,திருக்குர்ஆன்

(40 புள்ளிகள்)

## பகுதி- II

❖ **முதலாம் வினாஉட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

01)

1) குடியியற் கல்விப்பாடத்தில் இரண்டாம் தணையில் உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீட்டுவகை யாது.? (2 புள்ளிகள்)

2) அக்கணிப்பீட்டினைப் பூர்த்திசெய்த பாட அலகைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

3) மேற்படிகணிப்பீட்டைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

4) கணிப்பீட்டைப் பூர்த்தி செய்வதற்கு ஆசிரியர் வழங்கியஆலோசனைகள் இரண்டு தருக? (3 புள்ளிகள்)

5) கணிப்பீட்டைப் பூர்த்திசெய்வதால் பெற்றுக் கொண்ட இரு நன்மைகளைத் தருக? (3 புள்ளிகள்)

02)

1) உமது பாடசாலை வரலாற்றை அறியஉதவும் மூலாதாரங்கள் மூன்று எழுதுக? (3 புள்ளிகள்)

2) பாடசாலை மாணவர்களால் நிறைவேற்ற வேண்டிய மூன்று கடமைகளைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

3) தனிமனித் திறமைகளை அதிகரித்துக் கொள்வதற்கப் பயன்படுத்தக் கூடிய நுட்பங்கள் மூன்று எழுதுக? (3 புள்ளிகள்)

4) எம்மிடம் காணப்படும் பலவீனங்களைக் குறைத்துக் கொள்ளப் பின்பற்ற வேண்டிய விடயங்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

03)

1) நீர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் பாடசாலைக்குச் செல்வதற்கு மேற்கொள்ளும் முன்னாயத்தங்கள் மூன்றினை எழுதுக? (3 புள்ளிகள்)

2) திட்டமிட்டு நாம் செயற்படுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளில் மூன்றைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

3) பாடசாலைக் கொடி ஏற்றப்படும் போது கடைப்பிடிக்க வேண்டிய மூன்று விடயங்களை எழுதுக? (3 புள்ளிகள்)

4) பாடசாலை மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் மூன்று சேவைகளைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

04)

1) உமதுபாடசாலைஅமைந்துள்ள,

   1) கிராமஉத்தியோகத்தர் பிரிவு:

   2) பிரதேசசெயலர் பிரிவு :

   3) மாவட்டம் : என்பவற்றைக் குறிப்பிடுக?

(3 புள்ளிகள்)

2) நாம் காடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் பயன்கள் மூன்று எழுதுக? (3 புள்ளிகள்)

3) இயற்கை வளங்களைப் பாதுகாக்க முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் மூன்றினைத் தருக? (3 புள்ளிகள்)

4) மனிதவளத்தை மேம்படுத்தும் பயிற்சியின் மூலம் கிடைக்கும் நன்மைகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

05)

1) நீர் வாழும் பிரதேசத்தில் மக்கள் ஒற்றுமையாகச் செயற்படும் சந்தர்ப்பங்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

2) ஒற்றுமையாகச் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

3) பின்வரும் சேவைகளை வழங்கும் அரச அலுவலர்களைக் குறிப்பிடுக.
   1) கிராமமக்களின் வதிவிடத்தை உறுதிப்படுத்தல்.
   2) தேர்தல் வாக்குச் சீட்டை விநியோகித்தல்.
   3) பிரதேசத்தின் சட்டவிரோதச் செயல்களைத் தடுத்தல். (3 புள்ளிகள்)

4) பிரதேசசெயலகத்தினூடாக மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் மூன்று எழுதுக? (3 புள்ளிகள்)

06)

1) பிரதேச சபையினால் ஆற்றப்படுகின்ற சேவைகளில் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

2) எமது பிரதேசத்தில் காணப்படும் பின்வரும் சங்கங்களினால் ஆற்றப்படுகின்ற ஒவ்வொரு பணிகளை எழுதுக?
   1) கூட்டுறவுச் சங்கம் :
   2) மரணஉதவிச் சங்கம் :
   3) கமத் தொழில் சங்கம் : (3 புள்ளிகள்)

3) சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக் கொள்பவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

4) எமக்குச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் கடமைகளில் மூன்றினை எழுதுக? (3 புள்ளிகள்)

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457